

# திரும்பிப் பார்க்கிறேன்!

வான் பொய்யினும் தான் பொய்யாக் காவிரியின்
கோன் பெருமைக் கொண்டதாம் சோழ மண்ணில்,
வான் புகழாய் நிறைந்த ஓர் வேளாண்குடிப் பிறந்து,
பூண் என்று வேளாண்வழி வாழ நினைக்கையிலே,

வீண் என்று ஆட்சியரும்  வேளாண்மைப் புறம்தள்ள,
வியன்நிலையை அறிந்தக்காலை, பணிதேடும் பயணத்தில்,
பயன்நோக்கா மனத்தினனாய்ப் பயணிக்கச் சுங்க இல்லம்;
இயல்மனமாய் எனை யழைக்கப், பணியமர்ந்தேன்!

வயல்மேவும் வாழ்வு தகர்த்து; நெய்தல்வழி நடைபயில,
இயற்றமிழும் எனை அணைக்க இன்பமாய்ப் பணியகமும்!
நயம்படவே தமிழும்செய்து, பணியோடும் பயணித்தேன்!
வியப்போடு நோக்குங்கால், விழுதாகக் கழிந்ததுவே!

தயங்காமல் தமிழென்னைத் தாங்கி உயர்த்தியதே!
முயங்கிய நாட்களெல்லாம் நெஞ்சத்து நினைவுகளில்
முயங்காமல் பணியிலுமோர்ச் சீர்மைக் கொண்டேன்!
முடிவில்லாப் பெருமையதில் அடையக் கண்டேன்!

புடை சூழும் நண்பரெனப் போயினதேத் தமிழின் பயணம்!
விடை தேடும் வாழ்க்கைக்குச் சிலர் கேட்கச் சோதிடமும்;
தடையேதும் இல்லாமல் பணியினுடே தழைந்திடவும்;
குடையாகப் பணியதுவும் தடையில்லாப் பெருமையுடன்,

நடை பயின்ற  மகிழ்வானத் தருணங்கள் நினைவினிலே!
நலமாகப் பணியாளர் அமைப்பினுடேச் சேவை செய்தேன்!
ஆலமாய்ப் பலநிலைகள் அமைந்ததினால், அனைவருக்கும்
கோலமாய் மனத்தினூடே நடமிட்ட நண்பனானேன்!

சீலமாய் எனைவளர்த்தார் பலரும் நினைவிலுண்டு!
ஆலமாய்த் தழைத்திருக்கும் அருகெனவாய்ப் படர்ந்தே!
பாலத்தை இருபுறமும் தாங்கும் பழுதில்லா கரையவரே!
சீலமாய் அனைவரையும் நினைவிலேற்றி நவிலுமோர் நன்றி!

பத்தரைப் மாற்றுப் பொன்னெனப் பசுமை நினைவுகள்!
முத்தாய் முப்பத்தாறுக்கு இருதிங்கள் குறைந்து விட,
சொத்தாகப் பணிநிறைவுக் கண்டேன் யானே!
இத்தரையில் என்பெயரும் பலநாள் வாழும்!

முத்தாகச் சுங்கத்திலும்  ஒலிக்கும் சிலநாள்!
கொத்தாக வாழ்விதிலே பெருமை கொள்ள,
சித்தமாய் அருள்செய்த கண்ணன் தாள்வணங்கி,
அத்துனைப் பேருக்கும் நன்றியோடு வாழ்த்துதானே!

கு.ப. அசோகன்,

28-05-2020 (31-05-2020)